# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

***2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி அவர்களால் 2024, யூன் மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, மே மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[263 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)**

## 2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனத்தினது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் வகைகள் மற்றும் இணைப் பெயர்களை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாலும்:

மேலும் இலங்கையின் கணிய அளவையாளர்களின் நிறுவனம் மேற்கூறிய தேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களை வழங்குவதற்காக, இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்யுமாறு கோரியிருப்பதால், அத்தகைய திருத்தத்தை நிறைவேற்ற வேண்டியது பொருத்தமானதாகும் என்பதாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) ஏற்கனவே உள்ள உபபிரிவுகளான (2), (3) மற்றும் (4) ஆம் பிரிவுகளை முறையே (3), (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளாக மீள் இலக்கமிடுதல் மற்றும் அப்பிரிவின் (2) ஆம் உப பிரிவாக கூட்டுத்தாபனத்தின் கௌரவ வாழ்நாள உறுப்பினராகப் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினருக்கும், தனது பெயருக்குப் பின்னல், "Hony, LFIQS SL" என்ற சுருகக்மான பதவியைப் பாவிப்பதற்கு உரிமை கிடைக்கப் பெறுதல் வேண்டும் என்ற சொற்பதங்களை உள்ளிடுவதன் மூலமாகவும்;

(ii) அவ்வாசகத்தில் மீள் இலக்கமிட்ட (3) ஆவது உபபிரிவில் "F.L.Q.S.SL" எனும் எழுத்துக்களை நீக்கி அதில், "FIQS.SL" எனும் எழுத்துக்களை உள்ளிடுவதன் மூலமாகவும்;

(iii) அவ்வாசகத்தின் மீள் இலக்கமிட்ட துணைப்பிரிவு (4)ஐ இரத்துச் செய்து பின்வரும் சொற்றொகுதியை உள்ளீடு செய்வதன் மூலம், "கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் அவரது பெயருக்குப் பின் சுருக்கமான பதவியான "MIQS SL" ஐப் பயன்படுத்த உரிமையுடையவராவர்;

(iv) இவ்வாசகத்தின் மீள் இலக்கமிடப்பட்ட துணைப்பிரிவு (5)ஐ இரத்து செய்து, அதற்காக உபபிரிவு (5) ஆக பின் வரும் உபபிரிவை உள்ளடக்குதல் அதாவது, "ஒரு கணிய அளவையாளர்களின் நிறுவனம் அதனுடைய பெரும் பாலான பங்காளர்கள் அல்லது பணிப்பாளர்கள் மற்றும் பங்குதாரர் கள் இந்தச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின்கீழ் உருவாக்கப்படவிருக்கும் விதிகளுக்கமைவான தகமைகளைக் கொண் டுள்ள இந்த கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாகவும் இருந்தால், அத்தகைய நிறுவனம் அல்லது கம்பனி, "பட்டய கணிய அளவையாளர்" அல்லது "பட்டய கணிய அளவையாளர்கள்" என்ற தலைப்பைப் பயன்படுத்து வதற்கு, அந்த நிறுவனம் அல்லது கம்பனி/ பேரவைக்கு கோரிக்கைவிடும் பட்சத்தில், பேரவை யினால் அனுமதிக்கப்படலாம்.";

(v) பின்வரும் வாசகத்தின் மீள் இலக்கமிடப்பட்ட உபபிரிவு (5)ஐ உடனடுத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் துணைப்பிரிவு (6) ஆக உள்ளடக்குவதன் மூலம்-

"இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நபரொருவர் அல்லது கம்பனி, கணிய அளவையாளர் அல்லது கணிய அளவீட்டு நிறுவனம் என இந்தச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தாலேயல்லாது, எந்த

வொரு நபரும் "பட்டய கணிய அளவையாளர்" அல்லது "பட்டய கணிய அளவையார்கள்" என்ற தலைப்பையோ அல்லது அதன் பாணியில் உள்ள எந்தவொரு சொல் அல்லது சொற்றொடரையோ, எந்த வடிவிலும் அல்லது முறையிலும் ஒருமையாகவோ அல்லது பன்மையாகவோ, பயிற்சிசெய்யும் போது, வேலைசெய்யும்போது, வேலைக்கு அமர்த்தும்போது மற்றும் பொது இடங்களில் பயன் படுத்தவோ, காட்சிப்படுத்துவோ கூடாது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.